[2000 மே 11

4. தகவல் கோரல்

(அ) உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரத்திற்குத் தொலைபேசியில் வந்த மிரட்டல்

திரு. பி.ஆர். சுந்தரம்: நேற்று இரவு நான் என்னுடைய அறையிலே இருந்தபோது நள்ளிரவு டெலிபோன் வந்தது. சுமார் 12.00 மணியளவில் டெலிபோனில் பேசிய நபர் என்னை ஒருமையில் பேசி, "நீ என்ன, எங்கள் மாவட்ட அமைச்சரைப் பற்றி ஒவ்வொரு முறையும் புகார் கூறிக் கொண்டிருக்கிறாய்; அவர் மீது உரிமைப் பிரச்சினை கொடுத்து இருக்கின்றாய்; அந்த உரிமைப் பிரச்சினையை வாபஸ் வாங்க வேண்டும். இல்லையென்றால் உன்னைத் தொலைத்து விடுவோம்" என்று கூறி, "நீ இராசிபுரம் செல்லும்போது சேலம் வழியாகத்தானே செல்வாய்; உன்னுடைய உயிரை எடுக்காமல் விட மாட்டோம்" என்று கூறினார். "நீ யார் பேசுகிறாய்" என்று கேட்டபோது டெலிபோனை வைத்துவிட்டார். அதற்குப் பிறகு 15 நிமிடம் கழித்து அதே குரல் மீண்டும் பேசியது. "நீ இராசிபுரம் வரும்போது உன்னைக் கொல்லாமல் விடமாட்டோம்" என்று மீண்டும், மீண்டும் பேசினார். ரிசீவரை எடுத்துக் கீழே வைத்துவிட்டேன். அதற்குப் பிறகு 5.00 மணியளவில் உங்களுக்கு நான் நடந்த நிகழ்ச்சியினைத் தொலைபேசியில் கூறினேன். இங்கே போலீசில் நான் புகார் கொடுத்திருக்கின்றேன். **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது இங்கே ரிக்கார்டில் இருக்காது. நான் மீண்டும், மீண்டும் சொல்கிறேன். நீங்கள் மரபை மீறிப் பேசுகிறீர்கள். உரிமைப் பிரச்சினை கொடுத்தாயிற்று. அது என்னவென்று நான் விசாரிப்பேன். அந்த அளவோடு நிற்க வேண்டுமே ஒழிய ** என்று நான் பேசிவிட முடியுமா? ஆகவே, நீங்கள் இதோடு நிறுத்திக்கொள்ளுங்கள்.

திரு. பி.ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் பேச்சுரிமை மறுக்கப்படுகிறது. சுதந்திரமாக நான் செயல்பட முடியாத நிலை இருக்கிறது. ** என்று கூறிக்கொண்டு நீங்கள் தகுந்த பாதுகாப்பு எனக்குக் கொடுக்க வேண்டும் என்று கூறிக்கொள்கிறேன். என்னுடைய உயிரைப் பற்றிக் கவலைப்பட்டது கிடையாது. அண்ணா தி.மு.க. 1972-லே இருந்து — நாங்கள் — பல உயிர்களைப் பறிகொடுத்துத் தான் இந்த இயக்கம் இன்றைக்கு வந்திருக்கின்றதேயொழிய பல.....

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2000 மே 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் உயிரைப் பற்றிக் கவலை இல்லையென்றால் எதற்கு எழுந்து உரிமைப் பிரச்சினை கொடுத்துக் கொண்டிருக்கிறீர்கள்?

திரு. பி.ஆர். சுந்தரம்: பொறுப்பைச் சொல்கிறேன் நான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொல்ல வேண்டிய விவரத்தைச் சொல்லிவிட்டீர்கள். நான் போலீஸ் துறைத் தலைவரை என் அறைக்கு அழைத்து, என்ன, ஏது என்று விசாரணை செய்து, உங்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமானால் கொடுக்கச் சொல்கிறேன். உங்களுக்குத் தனிப்பட்ட முறையிலே உயிருக்கு ஆபத்து ஏற்பட்டது என்று சொல்லிவிட்டு, அதற்குப் பிறகு நீங்கள் அரசியல் ரீதியாக, "உயிர் போனாலும் பரவாயில்லை" என்று பேசுவதில் அர்த்தம் இல்லை. உட்காருங்கள். நீங்கள் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டீர்கள். நான் நடவடிக்கை எடுக்கிறேன். (குறுக்கீடு) நான் இல்லையென்று சொல்லவில்லை. காவல் துறைத் தலைவரையே என் அறைக்கு அழைத்து என்னவென்று விசாரித்து உங்களுக்காக நடவடிக்கை எடுக்கச் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே என்மீது....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. அதைக் குறிப்பில் இருந்து எடுத்துவிட்டேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: இல்லை. இன்னொரு...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: **என்பதை அவைக் குறிப்பில் இருந்து எடுத்துவிட்டேன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: நாங்கள் எல்லாம், எதிர்க்கட்சிகள் எல்லாம் சேர்ந்து ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருங்கள். Official resolution-ஐ முடித்துவிடுகிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.